**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ம் நாள் திங்கள்கிழமை பிரதிவாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | **செல்வி** | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**18.3.2024 OS No. 7/2023 பிவா.சா.1 செல்வி ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை, பிரமாண வாக்குமூலத்திற்கு ஆகியவற்றிற்கான வழக்கு விபரங்களை யார் சொன்னார் என்றால் நான்தான் சொன்னேன். நான் 5-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் எழுத்துக்கூட்டி படிப்பேன். தாவா வழக்கு எந்த சொத்திற்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 209/2, 367/14 ஆகும். புல எண்.209/2 என்ன வகையான வகைப்பாடு என்றால் அது கொக்கலாஞ்சேரி புஞ்சை 1 ஏக்கர் ஆகும். புல எண்.209/2 நான்குமால் தெரியுமா என்றால் வடக்கே-209/1 த.பிச்சைத்தேவர், தெற்கே-பெ.வீரப்பன், மேற்கே-பெ.வீரப்பன், கிழக்கே-பெ.வீரப்பன். **(சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார்.)** தெற்கேயும், கிழக்கேயும் பெ.வீரப்பன் ஆவார். வடக்கேயும், மேற்கேயும் த.பிச்சைத்தேவர் ஆவார்.

2. புல எண்.367/14 நஞ்சையா, புஞ்சையா என்றால் நஞ்சை ஆகும். அதன் விஸ்தீரணம் 15 செண்ட் ஆத்தியடி குண்டு ஆகும். புல எண்.367/14 நான்குமால் தெரியுமா என்றால் வடக்கே- தென்வடல் வாய்க்கால், கிழக்கே- புல எண்.432/7 அ.ஈஸ்வரி, மேற்கே-க.பொன்னையா, தெற்கே- நா.ஆதிமூலம் ஆவார். தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 26 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள 26 ஆவணங்களில் குறிப்பிட்டு எந்த ஆவணம் எனக்கு பாத்தியம் என்பதை காட்டக் கூடியது என்று சொல்லமுடியுமா என்றால் 26 ஆவணங்களும் ஆகும்.

3. தாவா சொத்துக்கள் எனது அனுபவத்தில் உள்ளது என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 26 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். 26 ஆவணங்களில் எங்களுக்கு பாத்தியம் என்பது என்பதை காண்பிப்பதற்கோ, எனது அனுபவத்தில் உள்ளது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகள் ஈஸ்வரன், ராஜாஜி, ராஜபாண்டியின் அப்பா பெயர் ராமுத்தேவர் என்றால் சரிதான்.

4. ராமுத்தேவரின் அண்ணன் பெயர் சி.ரா.ஆதிமூலத்தேவர் என்றால் சரிதான். சி.ரா.ஆதிமூலத்தேவர்தான் ராமுத்தேவர் மற்றும் சி.ரா.ஆதிமூலத்தேவரில் மூத்தவர் என்றால் சரிதான். சி.ரா.ஆதிமூலத்தேவர், சி.ரா.ராமுத்தேவர் ஆகிய இருவரும் எந்த ஆண்டு, எந்த ஆவணம் மூலம் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் 1950-லேயே பாகம்பிரித்துக்கொண்டார்கள். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1950-ல் சி.ரா.ஆதி

மூலத்தேவர், சி.ரா.ராமுத்தேவர் ஆகிய இருவரும் பாகம் பிரித்துக்கொண்டதாக நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

5. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலும் 1950-ல் சி.ரா.ஆதி மூலத்தேவர், சி.ரா.ராமுத்தேவர் ஆகிய இருவரும் பாகம் பிரித்துக்கொண்டதாக நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும், வாக்குமூலத்திலும் 1950-ஆம் ஆண்டு சி.ரா.ஆதிமூலத்தேவர், சி.ரா.ராமுத்தேவர் ஆகிய இருவரும் பாகம் பிரித்துக்கொண்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சி.ரா.ஆதிமூலத்தேவருக்கும், சி.ரா.ராமுத்தேவருக்கும் 30.7.1967-ல்தான் பாகம் பிரித்தார்கள் என்றால் சரியல்ல. 30.7.1967-ல் தாவா சொத்துக்கள் சி.ரா.ராமுத்தேவருக்கு பாகத்தில் கிடைத்து அவர் அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

6. அந்த பாகபாத்தியத்தின் அடிப்படையில்தான் தாவா சொத்துக்கள் வாதிகளின் தந்தை பெயரில் வா.சா.ஆ.1 பட்டா பாஸ்புத்தகம் ஏற்பட்டுள்ளது என்றால் அது மோசடியாக வாதிகள் தயார் செய்துள்ளார்கள். இந்த பாகபாத்தியத்தின் அடிப்படையில்தான் நிலஉடமை மேம்பாட்டுத்திட்டதிலும், ராமுத்தேவர் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் சரியல்ல. இன்றுவரை தாவா சொத்துக்கள் யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. வா.சா.ஆ.2 ஆன பட்டா எண்.1197-ல் ராசுத்தேவர் மகன் ராமுத்தேவர் பெயரில் பட்டாவில் உள்ளது என்றால் சரியல்ல.

7. வா.சா.ஆ.2 ஆன பட்டாவின் அடிப்படையிலும், பாத்தியத்தின் அடிப்படையிலும் வாதிகள்தான் இன்றுவரை விவசாயம் செய்து வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 வரையிலான வரி செலுத்தி அனுபவித்து வந்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் பட்டா மாற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் என் அப்பா சொல்லி 2020-ல் தெரியும். பட்டா மாற்றிய விபரம் நான் எப்படி தெரிந்துகொண்டேன் என்றால் என் அப்பா கருப்பையா 2020-ல் சொல்லி தெரியும். என் அப்பா எப்போது இறந்தார் என்றால் 1.1.2024ல் இறந்துவிட்டார். தாவா சொத்து எனக்கு பாத்தியமே இல்லை என்றாலும், அதனால்தான் நான் பட்டா மாற்றி அனுபவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் பட்டா மாற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மாவட்ட வருவாய் அலுவலரிடம் பட்டா மாற்ற மனுவை 2020லேயே தாக்கல் செய்திருந்தேன்.

8. பட்டா மாற்ற மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு செய்ய வேண்டுமென்று யார் என்னிடம் விபரம் சொன்னது என்றால் என் அப்பா சொன்னார். நானும், கணேசன் என்பவரும் சேர்ந்துதான் மாவட்ட வருவாய் அலுவலரிடம் பட்டா மாற்ற மனு செய்தோம் என்றால் நான் தனியாக செய்தேன். கணேசன் பட்டா மாற்ற மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது. சி.ரா.ஆதிமூலத்தேவருடைய மகள் பெயர் என்னவென்றால் பிச்சை முத்து ஆகும். பிச்சைமுத்துவிற்கு இறப்புசான்றிதழோ, வாரிசு சான்றிதழோ உள்ளதா என்றால் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ளேன்.

9. பிச்சைமுத்து எப்போது இறந்தார் என்றால் 9.10.1973-ல் இறந்துவிட்டார். பிச்சைமுத்து இறந்த பிறகு அவருடைய வாரிசை காண்பிப்பதற்கு வருவாய்துறையிலிருந்து வாரிசு சான்றிதழ் கொடுத்துள்ளார்களா என்றால் கொடுத்துள்ளார்கள். நான் சொல்வதுபோல்

பிச்சைமுத்துவிற்கு தனியாக வாரிசு சான்றிதழ் தரவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் ஆதி மூலத்தேவருக்கு வாரிசுசான்றிதழ் தனியாக தரவில்லை என்றால் சரியல்ல. ஒருவர் இறந்துபோனால் இறந்தவரின் நேரடி வாரிசுகள் யாரென்றுதான் வாரிசுசான்றிதழ் கொடுப்பார்கள் என்றால் நான் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். சி.ரா.ஆதிமூலத்தேவர் இறந்த சமயத்திலேயோ, பிச்சமுத்து இறந்த சமயத்திலேயோ வாரிசு சான்றிதழ் கேட்டு மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் வாரிசு சான்றிதழை வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

10. சி.ரா.ராமுத்தேவரின் அண்ணன் சி.ரா.ஆதிமூலத்தேவரின் பேத்தியே நான் இல்லை என்றால் சரியல்ல. நான் போலீஸ் ஆதிமூலத்தின் வாரிசுகள் என்றால் சரியல்ல. ஆதிமூலம் என்ற பெயர் ஒற்றுமையை வைத்து நான் பொய்யாக சி.ரா.ஆதிமூலத்தேவரின் பேத்தி என கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பொய்யான அடிப்படையில் பட்டா கோரி வா.சா.ஆ.6 விசாரணைக்கான மனு கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல. மாவட்ட வருவாய்அலுவலரிடம் நான் கொடுத்த மனு முழுமையாக விசாரணை செய்யப்படாமல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பதாக கூறி முடிக்கப்பட்டது என்றால் எனக்கு உத்தரவாகிவிடும் என்பதால் வாதிகள் இங்கு வழக்கு தாக்கல் செய்துவிட்டார்கள்.

11. நான் தாக்கல் செய்துள்ள 26 ஆவணங்களும் என்னென்ன ஆவணங்கள் என்று சொல்லமுடியுமா என்றால் பார்த்து படித்துக்கொள்ளலாம். நான் தாக்கல் செய்துள்ள 26 ஆவணங்களும் என்னென்ன சங்கதிகள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 26 ஆவணங்களும் இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தினை படித்துப்பார்த்தேனா என்றால் படித்துக்கேட்டேன். நான் எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

12. நான் எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் என் பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லாததால் நான் எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் சுத்த பொய் என்றால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளை எதிர்வழக்குரையில் கூறியுள்ளதால்தான் வாக்குமூலத்தில் அவற்றை சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் பொய்யானவை என்பதாலும், வழக்கிற்கு சம்மந்தமில்லாதவை என்பதாலும், அவை ஏற்றுக்கொள்ளத்தக்கது இல்லை என்றால் சரியல்ல. நான் அனுபவித்ததாக கூறியிருப்பதில் எவ்வாறு அனுபவித்தேன் என்றால் நெல் அறுவடை செய்துவந்தேன். தற்போது வேலிக்கருவேலை உள்ளது.

13. எத்தனை நாட்களாக வேலிக்கருவேலை உள்ளது என்றால் 2-3 வருடங்களாக உள்ளது. எனது பிரமாண வாக்குமூலத்தில் 40 வருடங்களாக சீமைக்கருவேல இருப்பதாக கூறியிருப்பது சுத்த பொய் என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் 10 வருடங்களுக்கு ஒரு முறை சீமைக்கருவேல மரங்களை வெட்டி வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், என் சகோதரர் சொல்லி பொய்யாக வாக்குமூலம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எந்தக்காலத்திலும் சொத்தை அனுபவித்ததில்லை என்றால் சரியல்ல. வ ாதிகள்தான் தாவா

சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்காக தாவா சொத்துக்களை அனுபவித்து வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.

to A3,A5 to A7. A4 absent. Petition filed and allowed. For appearance of A4 and furnishing copies call on 29.4.2024.